

# CHEZHUMAI ©

# TIST

April 2006



## Points to be noted

1. Small Groups who have single kind of tree should immediately start a nursery with two more variety of tree species
2. Small Groups who have formed the group with relatives should immediately join one more non-relative family to their group.
3. Small Groups who do not have a bank account should immediately open an account on your group name

# செழுமை ©

## முக்கிய சில குறிப்புகள்

1. ஓர் இன மரங்கள் உள்ள தோப்பினை உடையவர்கள் உடனடியாக வெவ்வேறு இன வகைகள் உள்ள நர்சரி தொடங்கவேண்டும்.
2. உறவினர்களை உறுப்பினர்களாக கொண்ட சிறுகுழுக்கள் உடனடியாக உறவினர் அல்லாதவர்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளவேண்டும்.
3. வங்கி கணக்கு இல்லாத சிறுகுழுக்கள் உடனடியாக தங்கள் குழுவினரின் பெயரில் வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்க வேண்டும்.

TIST

The International Small Group & Tree Planting Program

TIST

**TIST India** : New No.52, Guru Ram Flats, Flat D, Venkat Ratnam Nagar, Adyar 600 020. Phone : 044 24411637, Mobile : 9840299822, Web: www.tist.org
**TIST USA** : Phone : 001 9188511917 Email : rameshn@tist.org

## Don’t Miss Your Opportunities in the TIST Program

As a participant in the TIST program, you have the opportunity to join with some of your neighbors to improve your life and your income, change the landscape in your village and improve the environment! Are you making the most of all the opportunities and benefits TIST offers to you and to your Small Group?

What about your Small Group meetings? When you meet weekly with your Small Group members you can share new ideas and best practices that have worked best for your nurseries, planting seedlings, and caring for your trees. It is a chance to talk, plan and find help for work that you wish to do or challenges you may face. You can discuss what you will do with the income your group receives from your live trees. Your meeting is a time of fellowship, sharing and laughter. Rotating leadership gives each person a chance to lead and serve the other group members as everyone comes to realize the talents each person brings to the group. Having a co-leader not only helps the leader, but also gives all the members a chance to enjoy working with different group members as a team. The time of building up at the end of your weekly meeting offers time to really look for positive attributes of the leader of that week’s meeting and speak specific positive statements. In this way, the leader hears what he or she has done that has made a difference to the groups and the whole group becomes aware of what they value in a servant leader.

## டிஐஎஸ்டி வழங்கும் வாய்ப்புகளை தவறவிடாதீர்கள்

டிஐஎஸ்டியின் அங்கத்தினராக இருப்பதால், நீங்கள் உங்கள் அக்கம்பக்கத்தினரோடு சேர்ந்து உங்களின் வாழ்க்கைத்தரத்தையும், வருமானத்தையும் உயர்த்திக் கொண்டு, உங்கள் கிராமத்தின் சுற்றுப்புற சூழல் நிலையையும் மாற்றி சுற்றுப்புறத்தை மேன்மை அடை செய்ய வாய்ப்பு உண்டு. நீங்கள் டிஐஎஸ்டி அளிக்கும் வாய்ப்புகளை நன்றாக பயன்படுத்துகிறீர்களா ? என்று சிந்தியுங்கள்.

உங்கள் சிறுகுழுக்களின் கூட்டங்கள் பற்றிய செய்தி என்ன ? நீங்கள் வாராந்திர கூட்டத்தில் சிறுகுழு அங்கத்தினர்களை சந்திக்கையில் சிறப்பு பயிற்சிகளை பற்றியும், புதிய கருத்துக்களை கொண்டு எவ்வாறு உங்கள் நர்சரிகளின் தரத்தை உயர்த்தியுள்ளீர்கள் என்பதைப் பற்றியும் தெரியப்படுத்தலாம். நாற்றுகளின் வளர்ச்சி மற்றும் மரங்களின் பாதுகாப்பு பற்றியும் கலந்து ஆலோசிக்கலாம். ஒருவர் ஒருவரோடு பேசி, திட்டமிட்டு, செய்யவிருக்கும் செயல்பாடுகளைப் பற்றியும், எதிர்நோக்கும் சவால்களைப் பற்றியும் எடுத்துரைக்க இது ஒரு நல்ல வாய்ப்பாகும். உங்கள் குழுவிற்கு வரும் வருமானத்தை எவ்வாறு பயன்படுத்துகீறிர்கள் என்றும் ஆலோசிக்கலாம். “கூட்டம்” என்றாலே சகோதரத்துவம், பகிர்வு, மகிழ்வு என்பதற்கான நேரமாகும். சூழல் முறையில் தலைவர்கள் தோந்தெடுக்கபடுவதால் அனைவரும் தலைமையேற்று நடத்த வாய்ப்பு கிடைக்கிறது. ஒவ்வொருவரின் திறனும் அவர்களின் முயற்சியால் வரும் பலன்களையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள முடிகிறது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு துணைத்தலைவரும் உண்டு.

Are you taking advantage of the training given by TIST? Are your Small Group members coming to node meetings? TIST staff members give training at monthly node meetings on developing nurseries, transplanting your seedlings, what trees will be most beneficial to plant, how to be working with your village governments, sustainable agriculture best practices and HIV/AIDS awareness and care. There is also discussion and training on land ownership, village development and how to manage the income your Small Group receives from planting your trees. You can ask questions and get answers, and if the answers aren't immediately available, those who are serving you at the nodes will do their best to find out and get answers to you. This is your chance to learn from other TIST group members what they are doing and what is working well. Your Small Group may have discovered some "best practices" that other Small Group members needs to know! Node meetings are the place you can share this information as well as ideas about what would make the TIST program as a whole better and more successful.

What about the benefits of the trees you are planting? You can find out the trees that will be the most valuable for your Small Group and for the environment as well as what the best trees are for improving the soil and planting near crops. If you have planted fruit and nut trees, you are realizing the harvest. If you have planted trees around your home and village, you can enjoy the shade and the beauty and see what your hard work has done to make where you live a better place.

அவர் தலைவருக்கு உதவியாக இருப்பதோடு, மற்ற அங்கத்தினர்கள் பிற குழுக்களின் அங்கத்தினர்களோடு சேர்ந்து பணி செய்ய வாய்ப்பு கிடைக்கிறது. வராந்திர கூட்டத்தின் இறுதி நிலை, தலைவர்களின் சிறந்த குன நலன்கள் மற்றும் முயற்சிகளையும் பற்றி தெரிந்த கொள்ள சிறந்த காலமாகிறது. இதனால் தலைவர்களும் தங்களைப்பற்றிய கருத்துக்களை தெரிந்து கொள்வதோடு, தாங்கள் எந்த அளவிற்கு குழுவிற்கு பயனுள்ளவராக இருந்து சேவை செய்துள்ளோம் என்றும், தலைமை பொறுப்பு வகிப்பவர்களிடம் அங்கத்தினர் எதிர்ப்பார்ப்பது என்ன என்பதை பற்றியும் தெரிந்து கொள்கிறார்கள்.

டிஜஎஸ்டி தரும் பயிற்சிகளின் மூலம் முழுபலனை அடைகிறீர்களா ? உங்களின் சிறுகுழு அங்கத்தினர் அனைவரும் "நோடு" கூட்டங்களில் கலந்து கொள்கிறார்களா ? டிஜஎஸ்டியின் பயிற்சியாளர்கள் மாதாந்திர "நோடு" கூட்டங்களில் நர்சரிகளின் தரத்தை உயர்த்துவதை பற்றியும் விதை நாற்றுகளை இடம்பெயர்த்து பயிரிடுவது, எவ்வகையான மரங்களை பயிரிட்டால் சிறந்த பலனை கரும் என்றும், கிராம அரசு நிர்வாகிகளோடு எவ்வாறு சேர்ந்து செயல்படுவது, விவசாயத் தொழில் நிலைக்க சிறப்பு பயிற்சிகள் மற்றும் எச்ஜவி / எய்ட்ஸ் விழிப்புணர்வு பாதுகாப்பு இவைகளில் பயிற்சி அளிக்கிறார்கள். நிலஉரிமை, கிராம வளர்ச்சி திட்டம், மரங்களின் மூலம் கிடைக்கும் வருவாயை சரிவர உபயோகித்தல் என்பனப்பற்றிய கலந்துரையாடல் நடை பெறுகிறது. உங்கள் மனதில் எழும் வினாக்களுக்கு விடை தெரிந்துகொள்ளலாம். உடனே விடை அளிக்க இயலாவிடினும் பயிற்சியாளர்கள் முயற்சி செய்து உங்களின் வினாவிற்கு விடை அளிக்கிறார்கள். டிஜஎஸ்டியை சார்ந்த மற்ற குழுக்களின் செயல்முறைகளை பற்றியும் நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

Are you making the most of changing and improving our environment? Your Small Group can make a difference not only in your village, but also in the world. You can see the trees and the improved landscape, and it is an encouragement to you as Small Group members and to others who may think that planting is too hard work and are discouraged that things cannot change. There are your visible results! You never know when something positive that you accomplish will spur others on to imitate you.

Your TIST Small Group can make a difference in the life of your village and in the lives of each of your families. Don't miss out on the opportunities of working together in your Small Group, taking advantage of the training given by TIST staff at the nodes, finding out about the best trees to plant and the benefits of those trees, improving your local landscape and the environment, and enjoying the visible results and the income of your hard work together.

நீங்கள் உங்களின் முயற்சியால் தெரிந்த கொண்ட சிறப்பு பயிற்சிகளை பற்றி மற்றவர்க்கு தெரிவிக்கலாம்.

இவ்வாறு “நோடு” கூட்டங்களில் உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதின் மூலம் டிஜஎஸ்டி நிகழ்வுகளை வெற்றிப்பெற செய்யலாம். மரங்களின் மூலம் வரும் பயன்கள் என்ன ? உங்கள் குழுவிற்கும், சுற்றுச்சூழலுக்கும் ஏற்ற மரங்களை தேர்வு செய்யலாம். எவ்வகை மரங்கள் மண்ணின் வளத்தை பெருக்கி, மற்ற பயிர்களும் வளர உதவியாக இருக்கும் என்று ஆராயலாம் நீங்கள் பழம் மற்றும் கடலை வகை மரங்களை பயிர்செய்திருந்தால் சிறந்த அறுவடை பெறலாம். உங்கள் வீட்டை சுற்றியும், கிராமத்தைச் சுற்றியும் மரங்கள் வைத்திருந்தால் மரங்களின் நிழலை அனுபவித்து அவைகளின் அழகை ரசித்து, உங்கள் கடின உழைப்பு எவ்வாறு நீங்கள் வாழும் இடத்தை சிறந்ததாக மாற்றியுள்ளது என்பதையும் உணர்ந்து மகிழலாம்.



Kandoor Node Meeting
காந்தூர் நோடு கூட்டம்

உங்கள் சுற்றுப்புறசுழலை மாற்றி, மேன்மைபடுத்தியதின் பயனை அடைந்துள்ளீர்களா ? உங்களின் சிறுகுழு கிராமத்தை மட்டுமல்ல, உலகத்தையே மாற்ற வல்லது. நீங்கள் வளர்த்த மரங்களையும், அதனால் மேன்மை அடைந்த நிலத்தோற்றத்தையும் கண்டு மகிழலாம். மரங்களை வளர்ப்பதும், சுற்றுப்புறத்தை மாற்றுவதும் எளிதானது அல்ல என்று நினைத்து சோர்ந்திருப்பவர்களுக்கு உங்களின் முயற்சி உந்து சக்தியாக அமையும். ஏனெனில் உங்கள் முயற்சியின் பலன் வெளிப்படையானதாகும். நீங்கள் ஒரு நல்ல செயல் செய்கையில் அது மற்றவர்களையும் ஊக்குவித்து உங்களை பின்பற்ற செய்யும் என்பதை நீங்களே நினைத்திருக்க மாட்டீர்கள்.

உங்களின் டிஜஎஸ்டி சிறுகுழு கிராமத்தில் மட்டுமன்றி உங்கள் குடும்ப வாழ்க்கையிலும் மாற்றத்தை கொண்டுவரும். ஆகையால் மற்ற அங்கத்தினரோடு சேர்ந்து உழைக்கும் வாய்ப்பினை தவறவிடாதீர்கள். “நோடு” கூட்டங்களில் அளிக்கும் பயிற்சிகளை கடைபிடியுங்கள், மரங்களின் பலனையும், அவைகளின் தரத்தையும் தெரிந்து கொள்ளுங்கள், உங்களின் நிலத்தையும், சுற்றுப்புறத்தையும் மேன்மைப்படுத்துங்கள், இவ்வாறு செய்தால் கடின உழைப்பிற்கான வருமானத்தையும் பெற்று, உழைப்பின் பலனை முழுமையாக அனுபவிப்பீர்கள்.



Chittoor Node Meeting
சித்தூர் நோடு கூட்டம்

## How much Carbon Dioxide Equivalent (CO2e) does a tree contain?

Trees are about 50% water and 50% wood. Since wood is about 50% carbon, each tonne of live tree mass is contains about a quarter tonne of carbon. To avoid confusion, all markets use carbon dioxide equivalent (CO2e) as the metric for carbon credits. Since a tonne of carbon becomes 3.67 tonnes of carbon dioxide, one tonne of live tree mass is equal to (1 x .25 x 3.67 =) 0.91 tonnes of CO2e.

Seedlings in young trees are fun to watch as they grow, but they are small and light. They do not contain much wood and thus don't contain much carbon. If you're paying for trees based on carbon, they're not worth much.

Let's look at how much carbon is in a tree its first 10 years. First, it must be noted that trees grow at different rates based on species, rainfall, climate, soil and other environmental parameters. The chart below shows the cumulative the amount of carbon in a hardwood tree, measured in kilograms. After 10 years, this tree will have accumulated almost 1/10$^{th}$ of a metric tonne of $CO_2e$

## ஒரு மரத்தினுடைய கார்பன் டை ஆக்ஸைடு சமானத்தின் அளவு ($CO_2e$).

மரங்கள் என்பது 50 சதவிதம் தண்ணீர், 50 சதவிதம் கட்டை அல்லது விறகு ஆகும். மரக்கட்டை என்பது 50 சதவிதம் கார்பன் என்பதால், உயிருள்ள மரத்தின் ஒவ்வொரு டன் அளவில் கால் பங்கு டன் கார்பன் உள்ளது. குழப்பத்தை தவிர்க்க சந்தையில் கார்பன் கிரிடிட்டுகளை அளவிட கார்பன் டை ஆக்ஸைடு சமானம் அளவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. கார்பனின் ஒரு டன், 3.67 டன் கார்பன் டை ஆக்ஸைடுவாக மாறுகிறது, ஒரு டன்னான உயிருள்ள மரத்தின் பொருன்மை 0.91 டன் கார்பன் டை ஆக்ஸைடு சமானத்திற்கு சமமாகும். (1 x 0.25 x 3.67) = 0.91.

வளர்ந்துவரும் விதை நாற்றுகளை கவனிப்பது மிகவும் நன்றாக இருக்கும். ஆனால் அவைகள் சிறியதாகவும், இலேசாகவும் இருக்கும். அவைகளில் விறகு இல்லாததால் கார்பனும் குறைவாகவே உள்ளது. கார்பனை பொருத்து கட்டனம் செலுத்தினால் இந்த இளம் நாற்றுகள் பயன் தராது.

முதல் பத்து வருடத்தில் ஒரு மரத்தின் கார்பன் கொள்ளளவு எவ்வளவு என்பதைப் பற்றி பார்ப்போம். முதலில் மரங்களின் வளர்ச்சி, அதன் இனவகை, மழை அளவு, சீதோஷன நிலை மண்வளம் மற்றும் சுற்றுபுறச்சூழல் நிலைகளை பொருத்து வேறுபடும். இங்கு கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் மரங்களின் கார்பன் அளவை கிலோகிராம் அளவில் விளக்குகிறது. பத்து வருடங்களுக்கு பின், இந்த மரத்தின் கார்பன் அளவானது 1/10$^{th}$ மெட்ரிக் டன்னாக இருக்கும்

**Chart 1: Cumulative carbon ($CO_2e$) in a growing tree**

| Year | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Kilograms | 1 | 3 | 7 | 13 | 21 | 31 | 43 | 58 | 75 | 94 |

**படம்: 1 திரளாக சேர்த்த கார்பன் ($CO_2e$) வளரும் மரத்தில்**

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிலோகிராம் | 1 | 3 | 7 | 13 | 21 | 31 | 43 | 58 | 75 | 94 |

## Note from TIST

Quantification on the newly planted trees will be done only after six months. When quantification is done immediately after transplanting, there are of lot of trees and the voucher payment for the concerned is small group also very high. Later after 6 months, when quantification is done on the same grove, the number of trees fall down by 50% due to very poor care by the members. This is a very poor practice. The main motive of TIST is to protect the trees. Every Small Group should prove their efficiency in protecting their trees. From April 2006, quantification will not be done immediately after transplanting. Your quantifiers will quantify your trees only after 6 months from the date of transplanting, so cooperate with your quantifiers.

## Cooperate with your Quantifiers

Minimum 2 members from every small group should attend the Node meetings without fail. During the Node meeting, every small group will be given a date for quantification. On that day, your quantifier will visit your groves for quantification. The members should accompany the quantifier during quantification, walk with the quantifier and should help the quantifier in identifying all the trees. After the quantification, ask your quantifier for the quantification summary and file it along with your SGMR reports, this will help you during voucher payment to find out whether you get payment for all your trees.

Sign the GHG agreement and take the Voucher payment.



ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக வவுச்சர் தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## டிஜஎஸ்டியின் செய்தி

புதியதாக பயிரிடப்பட்டுள்ள மரங்களின் ஆய்வு மற்றும் கணக்கெடுப்பு ஆறு மாதங்களுக்கு பிறகே நடைபெறும். நாற்றுகள் இடம் பெயர்த்து நடப்பட்டவுடன் ஆய்வு மேற்கொண்டால், மரங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதோடு, சிறு குழுவுக்கு கொடுக்கப்படும் வவுச்சர் பேமென்ட்டும் அதிகமாக உள்ளது. ஆனால் ஆறு மாதங்களுக்கு பிறகு அதே தோப்பில் ஆய்வு மேற்கொண்டால் மரங்களின் எண்ணிக்கை 50 சதவிதம் குறைந்து காணப்படுகிறது. இதற்கு அங்கத்தினரின் கவனக் குறைவே காரணம். டிஜஎஸ்டியின் முக்கிய நோக்கமே மரங்களை பாதுகாப்பது தான். ஒவ்வொரு சிறு குழுவும் மரங்களை பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தி தங்களின் திறமையை நிருபிக்க வேண்டும். ஏப்ரல் 2006 முதல் ஆய்வு மற்றும் கணக்கெடுப்பு நாற்றுகள் இடம் பெயர்த்து நடப்பட்டவுடன் மேற்கொள்ளப்படமாட்டாது. ஆறு மாத்திற்கு பின்பே கணக்கெடுப்பாளர் ஆய்வே மேற்கொள்வார். ஆகவே ஆய்வாளருடன் ஒத்துழையுங்கள்.

## ஆய்வாளருடன் ஒத்துழைப்பு

சிறு குழுக்களில் குறைந்தது இரண்டு அங்கத்தினராவது தவறாமல் “நோடு” கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும். கூட்டத்தில் ஒவ்வொரு சிறு குழுவுக்கும் ஆய்வுக்கான தேதி கொடுக்கப்படும். அந்த குறிப்பிட்ட தேதியில் ஆய்வாளர் கணக்கெடுப்புக்காக உங்கள் தோப்பை சந்திப்பார். அங்கத்தினர் ஆய்வின்பொழுது ஆய்வாளருடன் சென்று மரங்களை அடையாளங் கண்டு கொள்வதற்கும், கணக்கெடுப்பதற்கும் உதவ வேண்டும். ஆய்வுக்கு பின் ஆய்வு அறிக்கையின் நகலை பெற்றுக்கொண்டு உங்கள் SGMR (எஸ்ஜிஎம்ஆர்) அறிக்கைகளுடன் சேர்த்து கோப்பில் (file) வைத்துக்கொள்ளுங்கள். இது நீங்கள் வவுச்சர் பேமென்ட் பெறவும், எல்லா மரங்களுக்கான பேமென்ட் கிடைக்கிறதா என்று தெரிந்து கொள்ளவும் உதவியாக இருக்கும்.

## Sakthi & Nila Small Group of Sokandi

Apart from carrying out various important steps in protecting the trees, the members of these two small groups follow various other best practices like regularly:

Nila Small Group helping the quantifier



நிலா சிறுகுழு அங்கத்தினர் ஆய்வாளரோடு ஒத்துழைப்பு

1. Maintaining a log book
2. Conducting their small group meeting at least once in a month and making a note of the proceedings in the log book
3. Preparing the SGMR during their small group meeting
4. Attending the Node meeting in time without fail
5. Accompanying the quantifier during quantification and helping the quantifier in finding & counting all their trees
6. More important – the members are trying to help their neighbors and friends to join TIST. During March 2006 they have introduced two new families to TIST.

## சக்தி மற்றும் நிலா சிறுகுழு – சொக்கண்டி

மரங்களை பாதுகாக்க பல முயற்சிகள் மேற்கொள்வதோடு இந்த இரு அங்கத்தினர்கள் பல சிறந்த பயிற்சிகளை தொடர்ந்து கடைபிடித்து வருகின்றனர்.

1. தினசரி குறிப்பேடு (லாக்புக்) பராமரித்து வருகின்றனர்.
2. சிறு குழுவினர் மாதத்திற்கு ஒரு முறை கூட்டம் அமைத்து அதில் ஆலோசித்தவைகளையும், அதன் நிகழ்வுகளின் குறிப்புகளையும் குறிப்பேட்டில் குறித்துவைக்கின்றனர்.
3. கூட்டத்தின்பொழுது எஸ்ஜிஎம்ஆர் (SGMR) அறிக்கை தயாரிக்கிறார்கள்.
4. 'நோடு' கூட்டங்களில் தவறாமல் காலத்தோடு பங்கேற்கிறார்கள்.



Sakthi Small Group helping the quantifier

சக்தி சிறுகுழு அங்கத்தினர் ஆய்வாளரோடு ஒத்துழைப்பு

5. கணக்கெடுப்பின் சமயம் ஆய்வாளரோடு சென்று மரங்களை கணக்கெடுப்பதில் உதவுகிறார்கள்.
6. மிகவும் சிறப்பானது – அங்கத்தினர் தங்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களையும், நண்பர்களையும் டிஐஎஸ்டியில் சேர ஊக்குவித்து உதவுகிறார்கள். மார்ச் 2006'ல் இவர்கள் இரண்டு புதிய குடும்பத்தினரை டிஐஎஸ்டியில் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

## Job Opportunity

There are few vacancies in TIST India like, Quantifier & Coordinator. Interested members may meet your TIST Officials. You can also introduce your relatives and friends for these jobs, but they should join with TIST as Small Groups before taking up the responsibilities of a Quantifier or Coordinator.

## வேலை வாய்ப்பு

டிஐஎஸ்டி இந்தியாவில் உள்ள காலியாக இருக்கும் பணி இடங்கள் – ஆய்வாளர் / கணக்கெடுப்பாளர் மற்றும் ஒருங்கினைப்பாளர். விருப்பம் உள்ள அங்கத்தினர் உங்களின் டிஐஎஸ்டி அதிகாரிகளை சந்தியுங்கள். உங்களின் உறவினர்களையும், நண்பர்களையும் இந்த பணி இடங்களுக்காக அறிமுகப்படுத்தலாம். ஆனால் அவர்கள் சிறு குழுக்களில் சேர்ந்த பின்பே கணக்கெடுப்பாள் / ஒருங்கினைப்பாளராக பொறுப்பு ஏற்றுக்கொள்ள இயலும்.




Kandoor Small Group Members
காந்தூர் சிறுகுழு அங்கத்தினர்

# நோட் கூட்ட அட்டவணை

| நோடு | உட்பட்ட கிராமங்கள் | நோட் மையம் | கிழமை | காலம் | நேரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | முதல் | வரை |
| வாசி மற்றும் மேல் கொடுங்கலூர் | சிங்கப்பள்ளி உளுந்தை மேல் கொடுங்கலூர் காட்டுக்கொல்லி | வன்தவாசி, மேல் கொடுங்கலூர் குன்னவாக்கம் | முதல் சனி<br>01.04.2006<br>06.05.2006 | மாலை<br>மாலை | 3.00<br>5.30 | 5.00<br>7.30 |
| பெருவளையம் | பெருவளையம் மேலாப்புலம், மோட்டூர் | மேலாப்புலம் | இரண்டாவது சனி<br>08.04.2006<br>13.05.2006 | காலை | 9.00 | 11.00 |
| கட்டியாம்பந்தல் | கட்டியாம்பந்தல் வெள்ளப்புத்தூர் | கட்டியாம்பந்தல் | இரண்டாவது ஞாயிறு<br>09.04.2006<br>14.05.2006 | காலை | 9.00 | 12.00 |
| சித்தூர் | சீராநல்லூர், சித்தூர், நந்திமேடு, மொளச்சூர்,. ஆட்டுப்புத்தூர் சிங்காடிவாக்கம் மருதம், ஜம்போதை | மொளச்சூர் மருதம், ஜம்போதை | மூன்றாவது ஞாயிறு<br>16.04.2006<br>21.05.2006 | காலை | 8.30 | 10.30 |
| காந்தூர் | சோகண்டி காந்தூர் | மொளச்சூர் | மூன்றாவது ஞாயிறு<br>16.04.2006<br>21.05.06 | காலை | 11.00 | 01.00 |
| ஆண்டிச்சிறு வல்லூர் | வேடல், சிறுவல்லூர் ஆண்டிச்செருவல்லூர் கொட்டவாக்கம் மேல்ப்படவூர், சிறுவல்லூர், மேட்டுக்காலனி | வேடல் | நான்காவது சனி<br>23.04.2006<br>27.05.2006 | மாலை | 3.00 | 5.00 |



**TIST India** : New No.52, Guru Ram Flats, Flat D, Venkat Ratnam Nagar, Adyar 600 020. Phone : 044 24411637, Mobile : 9840299822, Web: www.tist.org

**TIST USA** : Mr.N.Ramesh, Phone : 001 9188511917
Email : rameshn@tist.com